கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு பொதுக்கலைமாணித் தேர்வு – 2016/2017 (மார்ச்/ஏப்ரல் 2019)

# DT 2122 Music and Dance special reference to local performing Tradition

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி–I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி–II இருந்து இரண்டு வினாக்களுக்கும் என மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி – I

01. (அ) உள்ளூர்க் கலைப் பாரம்பரியம் என்றால் என்ன? வரையறை செய்க. (10 புள்ளிகள்)

(ஆ) உள்ளூர்க் கலைப் பாரம்பரியத்தின் தனித்துவமான அம்சங்களை உதாரணங்களுக்கூடாக முன்வைக்குக. (10 புள்ளிகள்)

02. (அ) உலகமயமாக்கல் சூழலில் உள்ளூர்க் கலைகள் பெறும் தாக்கத்தினை ஆராய்க. (10 புள்ளிகள்)

(ஆ) பாரம்பரிய கலைச் செயற்பாட்டில் உள்ளூர்க் கலைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்களைக் குறிப்பிட்டு அதற்கான தீர்வுகளை பரிந்துரை செய்க. (10 புள்ளிகள்)

03. (அ) உள்ளூர் சமுதாய இணைப்பாக்கத்தில் யாழ்ப்பாணப் பிரதேச காத்தவராயன் கூத்து பெறும் முக்கியத்துவம் பற்றி விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) சமகால சமூகப் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதில் உள்ளூர்க் கலைகளான மகிடிக் கூத்தின் வகிபாவத்தினை ஆராய்க. (10 புள்ளிகள்)

## பகுதி – II

04. உள்ளூர் ஆற்றுகைக் கலைகளில் இசை, நடனம் என்பன பெறும் முக்கியத்துவத்தினை உமது பிரதேசத்தில் காணப்படும் பாரம்பரிய ஆற்றுகைக் கலையினை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக. (30 புள்ளிகள்)

05. வசந்தன் கூத்தின் ஆற்றுகை முறைமையினை உமது பங்குகொள் அனுபவத்தின் ஊடாக தெளிவுபடுத்துக. (30 புள்ளிகள்)

06. நொண்டி நாடகம் தென்மோடிக் கூத்தின் களரியடித்தலில் வெளிப்பட்ட ஆடல், பாடல் முறைகளின் நுட்பங்களை உமது அனுபவத்தின் ஊடாக தெளிவுபடுத்துக. (30 புள்ளிகள்)

*****